**நவம்பர் – 30**

# தமிழ்நாடு செய்திகள்

## பெரம்பலூர் மாவட்டத்தின் முதலாவது சிப்காட் தொழில்துறைப் பூங்கா

- ❖ பெரம்பலூர் மாவட்டத்தின் எறையூரில் அமைக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில்துறைப் பூங்காவை முதல்வர் திறந்து வைத்தார்.
- ❖ மேலும், ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவிற்கான அடிக்கல்லினையும் அவர் நாட்டினார்.
- ❖ தொழில்துறை ரீதியாகப் பின்தங்கிய பெரம்பலூர் மாவட்டத்தின் முதலாவது சிப்காட் தொழில்துறைப் பூங்கா இதுவாகும்.
- ❖ சிப்காட் (SIPCOT) என்பது தமிழ்நாடு மாநிலத் தொழில்துறை மேம்பாட்டுக் கழகம் என்பதைக் குறிக்கும்.




# தேசியச் செய்திகள்

## சர்வதேச கீதா மஹோத்சவம்

- ❖ ஹரியானா மாநிலத்தின் குருசேத்திரத்தில் சர்வதேச கீதா மஹோத்சவம் நடைபெற்று வருகிறது.
- ❖ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் கீதா யக்யா நிகழ்ச்சியில் முதன்மை நிகழ்ச்சிகளை அரசு முறைப்படித் தொடங்கி வைத்தார்.
- ❖ ஹரியானா அரசானது 1989 ஆம் ஆண்டு முதல், குருசேத்திரத்தில் கீதா மஹோத்சவ் விழாவைக் கொண்டாடி வருகிறது.
- ❖ 2016 ஆம் ஆண்டில், கீதா ஜெயந்தி விழாவை சர்வதேச கீதா மஹோத்சவமாக

கொண்டாடுவதற்கு ஹரியானா அரசு முடிவு செய்தது.

❖ 2022 ஆம் ஆண்டு திருவிழாவில், நேபாளம் பங்குதாரர் நாடாகவும், மத்தியப் பிரதேசம் பங்குதாரர் மாநிலமாகவும் விளங்கும்.



# சர்வதேசச் செய்திகள்

## யுனெஸ்கோ-இந்தியா-ஆப்பிரிக்கா ஹேக்கத்தான் 2022

❖ யுனெஸ்கோ-இந்தியா-ஆப்பிரிக்கா ஹேக்கத்தான் என்ற நிகழ்வானது உத்தரப் பிரதேசத்தில் உள்ள கௌதம புத்தர் பல்கலைக் கழகத்தில் தொடங்கப் பட்டுள்ளது.

❖ இது அந்த அமைப்பின் நாடுகள் எதிர்கொள்ளும் பொதுவான சவால்களை எதிர் கொள்வதை நோக்கமாகக் கொண்டதோடு, கலாச்சார ஒருங்கிணைப்புக்கு ஒரு மையமாகவும் செயல்படுகிற வகையில் 36 மணிநேரம் நடைபெறும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.

❖ இது இந்தியா மற்றும் அதன் ஆப்பிரிக்கப் பங்குதார நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி சமூகத்தினரை ஒன்றிணைக்கிறது.




## உலகின் 'நீண்ட கால' எரிவாயு விநியோக ஒப்பந்தம்

❖ கத்தார் ஆற்றல் நிறுவனமானது, சீனாவுடனான தனது 27 ஆண்டு கால இயற்கை எரிவாயு விநியோக ஒப்பந்தம் குறித்து அறிவித்துள்ளது.

❖ இது ஆசிய நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்தியதால், LNG தொழில்துறையின் வரலாற்றில் இதுவரை மேற்கொள்ளப்படாத ஒரு "நீண்ட கால" ஒப்பந்தம் ஆகும்.

- அரசிற்குச் சொந்தமான இந்த எரிசக்தி நிறுவனமானது, ஆண்டிற்கு நான்கு மில்லியன் டன் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவினைச் சீனாவிற்கு அனுப்பும்.
- சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகியவற்றினை உள்ளடக்கிய ஆசிய நாடுகள் கத்தாரின் எரிவாயுக்கான ஒரு முக்கியச் சந்தையாகும்.



## உலக ஊடக மாநாடு

- உலக ஊடக மாநாட்டின் தொடக்க விழா அபுதாபியில் நடைபெற்றது.
- "ஊடகத் துறையின் எதிர்காலத்தை வடிவமைத்தல்" என்ற கருத்துருவின் கீழ் இந்த மூன்று நாட்கள் அளவிலான நிகழ்வு நடைபெற்றது.
- ADNEC குழுமமானது அமீரகச் செய்தி முகமையுடன் இணைந்து இந்தச் சந்திப்பு மற்றும் கண்காட்சி மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.




# மாநிலச் செய்திகள்

## உத்தரப் பிரதேச மாநிலத்தின் புதிய சுற்றுலாக் கொள்கை

- உத்தரப் பிரதேச அமைச்சரவையானது புதிய சுற்றுலாக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது அம்மாநிலத்தின் சமயம் சார்ந்தத் திறன்களை மேம்படுத்துவதனையும், நாட்டின்

சமயம் மற்றும் ஆன்மீகச் சுற்றுலா மையமாக இம்மாநிலத்தை நிறுவுவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இக்கொள்கையின் கீழ் தனித்தனி சமயச் சுற்றுகளை மாநில அரசு உருவாக்க உள்ளது.
- இதில் இராமாயணம், மகாபாரதம் மற்றும் பௌத்தச் சுற்றுகள் அடங்கும்.





# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## யுனெஸ்கோ அமைப்பின் ஆசிய-பசிபிக் பிராந்திய விருதுகள்

- இந்தியாவில் உள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜ் வாஸ்து சங்கரஹாலயா அருங்காட்சியகத்தின் மறுசீரமைப்புப் பணிகள் திட்டமானது, யுனெஸ்கோ அமைப்பின் 2022 ஆம் ஆண்டு கலாச்சாரப் பாரம்பரியப் பாதுகாப்புத் திட்டத்திற்கான ஆசிய-பசிபிக் பிராந்திய விருது விழாவில் சிறப்பு விருதைப் பெற்றுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் ஆசிய-பசிபிக் பிராந்திய கலாச்சாரப் பாரம்பரியப் பாதுகாப்புத் திட்டத்திற்கான விருதுகளானது 2000 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப் படுகிறது.
- இந்தப் பிராந்தியத்தில் பாரம்பரிய மதிப்புள்ளக் கட்டமைப்புகள் மற்றும் அந்த வகை கட்டிடங்களைப் புணரமைத்தல், பாதுகாத்தல் மற்றும் மாற்றியமைப்பதில் தனியார் துறையினைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவை மேற்கொள்ளும் முன்னெடுப்புகளை இந்த விருது அங்கீகரித்து வருகிறது.
- 2022 ஆம் ஆண்டில், இந்தியாவிலிருந்து 4 திட்டங்கள் உட்பட, 6 நாடுகளைச் சேர்ந்த 13 திட்டங்கள் இந்த விருதுகளுக்குத் தேர்வு செய்யப் பட்டன.
- விருது பெற்ற மற்ற மூன்று இந்திய அமைப்புகள்
  - கோல்கொண்டா கோட்டையின் படிக்கிணறு, ஹைதராபாத் - தனித்தன்மை விருது

  - தோமகொண்டா கோட்டை, தெலுங்கானா - தகுதிசார் விருது
  - பைகுல்லா இரயில் நிலையம், மும்பை - தகுதிசார் விருது

- ஆப்கானிஸ்தான் நாட்டின் கரிகார் பகுதியில் உள்ள தோப்தரா ஸ்தூபி மற்றும் சீனாவின் புஜியானில் உள்ள நான்சியன் புத்தக் கோவில் ஆகியவையும் 'தகுதிசார் விருதினை' பெற்றுள்ளன.



## EXCELL விருதுகள் 2022




- 2022 ஆம் ஆண்டு குடும்பக் கட்டுப்பாடு (EXCELL) திட்டங்களில் முன்னிலை விருதுகளைப் பெற்ற ஒரே நாடு இந்தியா ஆகும்.
- குடும்பக் கட்டுப்பாடு குறித்த சர்வதேச மாநாட்டில் 'நாடுகள் பிரிவில்' இந்தியா விருதினைப் பெற்றது.
- இந்த விருதானது, சரியான தகவல் மற்றும் நம்பகமான சேவைகளின் அடிப்படையில்

தரமான குடும்பக் கட்டுப்பாடு தேர்வுகளுக்கான (வசதிகள்) அணுகலை உறுதி செய்வதற்கான இந்திய அரசின் முயற்சிகளுக்கான ஒரு அங்கீகாரமாகும்.

- அந்த வசதிகளின் அணுகலை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தம்பதிகள் குடும்பக் கட்டுப்பாடு குறித்த தகவலறிந்தத் தேர்வுகளை (வசதிகளை) மேற்கொள்ளச் செய்யும் நவீனக் கருத்தடை முறைகளையும் பின்பற்றுவதிலும் இந்தியா சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## A பிரிவு கிரிக்கெட் போட்டியில் பெற்ற அதிக ஓட்டங்கள்

- தமிழ்நாடு வீரர் நாராயண் ஜெகதீசன் 141 பந்துகளில் 277 ரன்கள் குவித்து ஆடவர்களுக்கான A பிரிவு கிரிக்கெட் போட்டியில் பெற்ற அதிக தனிநபர் ஓட்டங்கள் என்ற உலகச் சாதனையைப் படைத்தார்.
- பெங்களூரு நகரில் நடைபெற்ற விஜய் ஹசாரே கோப்பைப் போட்டியில் அருணாச்சலப் பிரதேச அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் இந்த சாதனை ஆனது மேற்கொள்ளப் பட்டது.
- C பிரிவு கிரிக்கெட் போட்டியில் 435 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு முன், A பிரிவு கிரிக்கெட் போட்டியில் 500 ரன்களைத் தாண்டிய முதல் அணியாக தமிழ்நாடு அணி மாறியது.
- இதற்கு முந்தைய இத்தகையச் சாதனையானது 1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற டெவோன் அணிக்கு எதிரான போட்டியில் சோமர்செட் அணி 346 ரன்கள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றியாகும்.
- ஆடவர்களுக்கான A பிரிவு கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து ஐந்து சதங்கள் அடித்த முதல் வீரர் என்றப் பெருமையை ஜெகதீசன் பெற்றார்.
- இவர் அலிஸ்டர் பிரவுன் மற்றும் ரோஹித் ஷர்மா ஆகியோரை முந்தி அதிக தனிநபர் ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற புதிய சாதனையைப் படைத்தார்.




# முக்கிய தினங்கள்

## இந்திய உறுப்பு தான தினம் - நவம்பர் 27

- 2021 ஆம் ஆண்டு வரை, இந்திய உறுப்பு தான தினமானது நவம்பர் 27 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- இந்தியாவில் ஜூலை மாதமானது உடல் உறுப்பு தான மாதமாக அனுசரிக்கப்படும் என NOTTO அமைப்பு (National Organ and Tissue Transplant Organization) அறிவித்துள்ளது.

- இனி இந்திய உறுப்பு தான தினமானது ஆகஸ்ட் 03 ஆம் தேதி கொண்டாடப்படும்.
- 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 03 ஆம் தேதியில், இந்தியாவில் வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்ட நோயுற்ற நபர் ஒருவரின் இதய மாற்று அறுவைச் சிகிச்சையின் நினைவாக ஆகஸ்ட் 03 ஆம் தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இறப்பிற்குப் பின் உறுப்புகளை தானம் செய்வதாக உறுதிமொழி எடுப்பதற்கு மாணவர்களை ஊக்குவிப்பதும், உறுப்பு தானத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதும் இந்நாளின் நோக்கமாகும்.
- ஆகஸ்ட் 13 ஆம் தேதியானது உலக உறுப்பு தான தினமாக கொண்டாடப்படுகிறது.




## பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினம் - நவம்பர் 29

- அமைதியான முறையிலான பாலஸ்தீன-இஸ்ரேல் தீர்மானத்தை ஊக்குவிப்பதோடு, பாலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து அதிகளவு விழிப்பு உணர்வைப் பரப்புவதையும் இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1947 ஆம் ஆண்டில் இத்தினத்தன்று பாலஸ்தீனப் பிரிவினை குறித்தத் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்றுக் கொண்டது.
- இன்று 4.75 மில்லியன் பாலஸ்தீனியர்கள் காசா பகுதி மற்றும் மேற்குக் கரையில் பரவிக் காணப்படுகின்றனர்.





## இரசாயனப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நினைவு நாள் - நவம்பர் 30

- இந்தத் தினமானது இரசாயனப் போரினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்வதோடு, இரசாயன ஆயுதங்களைத் தடை செய்யும் அமைப்பிற்கான

உறுதிப்பாட்டினையும் உறுதிப்படுத்துகிறது.

- மேலும் இது அமைதி, பாதுகாப்பு மற்றும் பலதரப்பு இலக்குகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது, ஐக்கிய நாடுகள் சபையினால் (UN) அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டு 2005 ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப் படுகிறது.
- முன்னதாக, இரசாயன ஆயுதங்கள் உடன்படிக்கையானது 1997 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த ஏப்ரல் 29 ஆம் தேதியானது இத்தினத்தினை அனுசரிப்பதற்கான தேதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இதற்கிடையில், அதற்குப் பதிலாக ஏப்ரல் 29 ஆம் தேதியானது "சர்வதேச இரசாயன ஆயுதத் தடை அமைப்பின் துவக்க தினம்" என்று நியமிக்கப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற, இரசாயன ஆயுத உடன்படிக்கைக்கான 20வது பங்கு தாரர்கள் மாநாட்டில் இந்தத் தினத்திற்கான தேதியானது நவம்பர் 30 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★